பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 03 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** வேற்றுமையில் ஒற்றுமையே நமது வலிமை என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** தமிழகத்தில் கூடுதல் ரயில்கள் இயக்க வேண்டும் என்ற தமது கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

**3)** தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக பிஜேபி கூறியுள்ளது.

**4)** சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு **Sushrut Arvind Dharmadhikari** இன்று பதவியேற்றார்.

**5)** சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சித்தாந்த் குப்தா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

வேற்றுமையில் ஒற்றுமையே நமது வலிமை என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

நாகலாந்து பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நாட்டின் வளர்ச்சியில் இளையோர் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு வடகிழக்கு மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழக மக்களின் நலனை கருத்தில்கொண்டு கூடுதல் ரயில்களை இயக்க நடவடிக்கை எடுத்ததற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தாம் விடுத்த கோரிக்கையை ஏற்று பாலக்காடு — பொள்ளாச்சி,

மயிலாடுதுறை — காரைக்குடி, போத்தனூர் — தன்பாத், திருநெல்வேலி — மங்களூரு ஆகிய வழித்தடங்களில் புதிய ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மங்களூரு — ராமேஸ்வரம் இடையேயான விரைவு ரயில், திரூர், உடுமலைப்பேட்டை, பரமக்குடி ஆகிய ரயில் நிலையங்களிலும், தாம்பரம் — ராமேஸ்வரம் விரைவு ரயில் பண்ருட்டி ரயில் நிலையத்திலும் நின்று செல்லும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருச்சி — காரைக்குடி இடையேயான பயணியர் ரயிலும், சென்னை சென்ட்ரல் — போடிநாயக்கனூர் இடையேயான விரைவு ரயிலும் அனைத்து நாட்களிலும் இயக்கப்பட உள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருச்சி பஞ்சப்பூரில் பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 11-ஆம் தேதி பங்கேற்க உள்ள பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலத்தில் சட்டம் — ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாகவும், குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தவும் திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

சிவகங்கை, திருநெல்வேலி மாவட்டங்களில் நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் போன்றவை எதிர்காலத்தில் நிகழா வண்ணம் காவல்துறையினர் பணியாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதியில் நடைபெற்ற வன்முறை சம்பவத்தில் காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

வன்முறைக்கு காரணமானவர்களை அடையாளம் கண்டு அவர்களை காவல்துறையினர் ஒடுக்க வேண்டும் என்றும் திரு செல்வப்பெருந்தகை வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

நாங்குநேரி இரட்டை கொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த கொலைவெறி தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறையினர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும என்று கோரியுள்ளார்.

நாங்குநேரி பகுதியில் நடைபெற்றுவரும் சாதிரீதியிலான பிரச்சினகளை தடுக்க உரிய நடவடிக்கைகளை மாநில அரசும், காவல்துறையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு சண்முகம் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

சென்னை மத்திய கைலாஷில் எல்-வடிவ மேம்பாலம் கட்டப்பட்டதில் ஊழல் நடைபெற்றதாக கூறப்படும் புகார் குறித்து திமுக அரசு உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த பாலத்தின் குறைபாடுகள் குறித்து ஐ ஐ டி பேராசியர்கள் கொண்ட குழு

ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த பாலம் தரமற்றும், பலவீனமாகவும், அதிர்வுகளை ஏற்படுத்தும் வகையிலும் கட்டப்பட்டிருப்பதாக தாம் குற்றம் சாட்டியதை சுட்டிக்காட்டியுள்ள அவர், தற்போது மேம்பாலத்தின் மீது அவசரமாக தார் சாலை அமைத்திருப்பதாக குறை கூறியுள்ளார்.

இத்தகைய தார் பூச்சு வேலைகள் மூலம் ஊழல் குற்றச்சாட்டுகளை மறைக்க முடியாது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>

காவிரியின் குறுக்கே மேகதாது அணையை கட்ட காங்கிரஸ் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை கண்டத்திற்குரியது என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில், இந்த அணைக்கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை விரைவில் தயாரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை தடுத்து நிறுத்த சட்ட ரீதியாக மட்டுமின்றி, கூட்டணி கட்சியான காங்கிஸுக்கு அரசியல் ரீதியாகவும் திமுக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று திரு டி டி வி தினகரன் கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு **Sushrut Arvind Dharmadhikari** இன்று பதவியேற்றார்.

மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் திரு ஆர் என் ரவி அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

பின்னர் உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய தலைமை நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றத்தின் உயர்ந்த மரபுகளை பாதுகாத்து வலுப்படுத்துவதே தமது முதல் கடமை என்று கூறினார்.

<<<<<<<>>>>>>

குடிமைப்பணி தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

இதில் தொள்ளாயிரத்து **58** பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழகத்தை சேர்ந்த ராஜேஸ்வரி **Suve** அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்தை பிடித்தார்.

<<<<<<<>>>>>>

சர்வதேச பின்னலாடை இயந்திரம் மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி, திருப்பூர் அருகே திருமுருகன்பூண்டியில் இன்று தொடங்கியது.

நான்கு நாட்களுக்கு இந்த கண்காட்சி நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சபரிஷ் - 41 Sec. )***

*<<<<<<<>>>>>>*

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 24 Sec.***

*<<<<<<<>>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் மருத்துவ

பணியாளர்களுக்கான பாராட்டு விழா மாநில அமைச்சர் திரு மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

தருமபுரி மாவட்டத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு சதீஷ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

------------------

கடலூர் மாவட்டத்தில் தேர்தல் விழிப்புணர்வு ரங்கோலி போட்டியினை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று பார்வையிட்டார்.

------------------

ஈரோடு மாவட்டம் வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக வரும் 9-ஆம் தேதிமுதல் 100 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------

அஞ்சல்துறை ஓய்வூதியதாரர்களுக்கான குறைதீர் முகாம் அடுத்த மாதம் 16-ஆம் தேதி சென்னையில் உள்ள முதன்மை அஞ்சல்துறை தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----------------

நீலகிரி மாவட்ட எல்லைக்குள் கேரள மாநில வரவேற்பு பலகை வைத்த விவகாரத்தில் பொதுமக்கள் பதற்றமடையத் தேவையில்லை என்றும், வரவேற்பு பலகை உடனடியாக அகற்றப்படும் என்றும் ஆட்சியர் திருமதி லஷ்மி பவ்ய தண்ணீரு கூறியுள்ளார்.

-------------------

திருவாரூர் தியாகராஜர் கோவிலில் பங்குனி உத்திர பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சித்தாந்த் குப்தா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **18-21, 21-18, 21-9** என்ற செட் கணக்கில், சிங்கப்பூரின் **Jia Wei Joel Koh-**வை வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், **Kaushal Dharmamer-** வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Likhita Srivastava — Sonali Singh** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் சாத்விக் ரெட்டி — ராதிகா சர்மா இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியின் சிறந்த ஆட்டக்காரருக்கான விருதுக்கு இந்தியாவின் **Sanju Samson-**னின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

----------

கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப்போட்டிகள் சட்டீஸ்கரில் வரும் **25-**ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **6-**ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<<END>>>>>>>**